# உடன்பிறப்பே... 9

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்வோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த அன்பில் தர்மலிங்கம் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# அன்பில் தர்மலிங்கம்

# மலைக்கோட்டை தந்த கொள்கைக் கோட்டை!




*1965*-ஆம் ஆண்டில் இந்தித் திணிப்பை எதிர்த்து நின்றது, தமிழ்நாடு. சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் அதிகாரத்தின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார் மாணவப் போராளி இராசேந்திரன். அந்த இளம்வேங்கையின் மரணம் தமிழ்நாட்டைப் போராட்டக் களமாக்கியது.

அதன் தொடர்ச்சியாக, மலைக்கோட்டை மாநகரிலும் போராட்டம் பற்றி எரிந்தது. திருச்சி நகர் டவுன்ஹாலில் கழகம் சார்பில் கருப்புக் கொடி ஏற்றப்போவதாகச் செய்திகள் வெளியாகின. காவல்துறை, நகர் முழுவதும் குவிக்கப்பட்டது. **‘கழகத்தினர் கருப்புக்கொடி ஏற்ற, எந்த வழியாக வந்தாலும் கைது’** எனப் பயமுறுத்தினர்.

கட்டுக்கடங்காத மாணவர்க் கூட்டம், ஒரு தளகர்த்தரின் வருகையை எதிர்நோக்கிக் கூடியிருந்தது. கைதுக்குப் பயந்து வரமாட்டார் என அதிகாரிகள் நினைத்தனர். ஆனால், பயமறியா அண்ணாவின் தம்பி, யாரும் எதிர்பாராத திசையிலிருந்து தன் உடன்பிறப்புகள் படைசூழ, டவுன்ஹால் நோக்கி விரைந்தார். காவல்துறையின் தடுப்பு வளையத்தை உடைத்து, ஆதிக்க இந்திக்கு எதிராகக் கருப்புக் கொடியை டவுன்ஹாலில் ஏற்றினார் அந்த கலைஞரின் உடன்பிறப்பு. கம்பத்தின் உச்சியைக் கருப்புக் கொடி தொட்டபோது **‘அன்பிலார்’** என ஆயிரக்கணக்கானோர் முழங்க, அதிர்ந்தது திருச்சி.

> **த**லைமைக் கழகத்தின் சார்பில் 1986-ம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், கொள்கை குறையாத சுயமரியாதைக்காரராக வாழ்நாளெல்லாம் விளங்கிய அன்பிலாருக்குத் தனது கைகளால் பெரியார் விருதை வழங்கிப் பெருமை சேர்த்தார் கலைஞர்.

அன்று **‘அன்பிலார்’** என போராட்டக் களத்தில் மாணவர்களாலும் கழகத்தினராலும் அன்போடு அழைக்கப்பட்டவர்தான், தந்தை பெரியாரின் பட்டறையில் உருவாகி, பேரறிஞர் அண்ணா வளர்த்தெடுத்து, முத்தமிழறிஞரின் தோளோடு தோள் நின்று கழகம் வளர்த்த உடன்பிறப்பு அன்பில் தர்மலிங்கம் அவர்கள்.

## சலூன் கடை சுயமரியாதைக்காரர்

திருச்சி மாவட்டத்தில் உள்ள சிறிய கிராமம் அன்பில். அந்த கிராமத்தின் பெயரைத் தன் பெயருக்கு முன்னால் சேர்த்துக்கொண்டு, அந்த ஊரை தமிழ்நாடு முழுவதும் கொண்டு சேர்த்தவர் ‘அன்பில்’ தர்மலிங்கம். 1919-ஆம் ஆண்டு மே 14-ம் நாள் பெரியசாமி நாட்டார் - ஆச்சிக்கண்ணு அம்மாள் ஆகியோருக்குத் தலைமகனாகப் பிறந்தார் அன்பிலார்.

‘முடிதிருத்தும் நிலையங்கள்’ என்றுமே திராவிட இயக்கத்துக்கான கொள்கைச் சாலைகள். அப்படியொரு கொள்கைச் சாலை, இலால்குடி அரசு ஆண்கள் பள்ளியின் எதிர்ப்புறம் இருந்த **‘துரைசாமி முடி திருத்தும் நிலையம்’**. அந்தக் கடையில் **‘குடிஅரசு’** உள்ளிட்ட பகுத்தறிவு இதழ்களை வாங்கி வைப்பார் கடை உரிமையாளர். அதைப் படித்து இயக்க உணர்வு பெற்றார் அன்பில் தர்மலிங்கம்.

1937 - ல் இலால்குடி அருகே ‘நகர்’ கிராமத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பெரியார் பேசினார். அந்தக் கூட்டத்தில் பெரியாரின் பேச்சைக் கேட்ட அன்பிலார், அன்று முதலே பெரியாரின் பெரும் தொண்டராக மாறுகிறார். உடனே தன்னை தென்னிந்திய நல உரிமைச் சங்கத்திலும் உறுப்பினராக இணைத்துக்கொள்கிறார்.

## பெரியார் அனுமதியோடு தி.மு.க

அண்ணா அவர்கள் பெரியாரிடமிருந்து விலகி, கழகத்தை உருவாக்கிய தருணம். எந்த முடிவை எடுப்பது, என ஆழ்ந்து யோசித்த அன்பிலார் இறுதியாக, அண்ணாவுடன் செல்வது என்ற முடிவுக்கு வருகிறார். ஆனால், ‘தன்னை வளர்த்தெடுத்த பெரியாரிடம் சொல்லி விட்டுத்தான் வருவேன்’ என முடிவெடுத்து பெரியாரை நேரில் சந்தித்து, அவரின் அனுமதி பெற்று தி.மு.க.வில் இணைந்தார்.

1949-ல் தி.மு.க. உருவாக்கப்பட்டபோது, கழகத்தின் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட 133 பேர்களைக் கொண்ட பொதுக்குழுவில் அன்பிலாரின் பெயரும் இடம் பெற்றிருந்தது

## கலெக்டரைப் போல செயலாளர்

1953- ஆம் ஆண்டு மும்முனைப் போராட்டத்தை அறிவித்தார் அண்ணா. கல்லக்குடிப் போராட்டக் களத்துக்கு கலைஞரைத் தலைவராக நியமித்து அனுப்பி வைத்தார். அந்தப் பகுதியின் மாவட்டச் செயலாளராக உடன் நின்று போராட்டப் பணிகளை மேற்கொண்டவர், அன்பில் தர்மலிங்கம்.

கல்லக்குடிப் போராட்டத்தின் போது அன்பிலாரின் செயல்பாடுகளைப் பார்த்து ‘நீங்கள் யார்?’ என்றனர் அதிகாரிகள். “நான் மாவட்டச் செயலாளர்” என கழகத்தின் கட்டமைப்பு தெரியாத அதிகாரிகளுக்குப் பதில் சொன்னார். “அப்படி என்றால் என்ன?” என மீண்டும் கேட்டவர்களுக்கு, “மாவட்ட கலெக்டரைப் போல” என பதிலுரைத்து மிரள வைத்தார், அந்த தளகர்த்தர்.

1950-ல் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பேற்று 1972 - வரை, 22 ஆண்டுகள் தொடர்ந்து மாவட்டச் செயலாளராகப் பணியாற்றினார் அன்பில் தர்மலிங்கம்.

## அன்பில் அழைக்கிறார்!

1956-ல் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு திருப்புமுனை தரும் வகையில், மே 17, 18, 19, 20 ஆகிய தினங்களில் திருச்சியில் நடைபெற்றது. அந்த மாநாட்டை நடத்தும் பொறுப்பை அன்பிலாரிடம் வழங்கினார் அண்ணா. அதுமட்டுமல்ல, மாநாட்டுக்கு கழகத்தினரை அழைப்பு விடுக்கும் வகையில் **‘திராவிட நாடு’** இதழில் கடிதம் ஒன்றை எழுதினார் அண்ணா. அந்த கடிதத்துக்குத் தலைப்பே **“அன்பில் அழைக்கிறார்”** என்பதுதான்.

“தம்பி! ‘இன்பத் திராவிட’த்தைப் பெறுவதற்கான, வழிவகை பற்றிக் கலந்து பேசவும், கருத்துக் காணவும், திட்டம் தீட்டவும், செயல்படவும் வாய்ப்பு ஏற்படும். அன்பில் அழைப்பதும் அதற்குத்தான்” என தம்பிகளுக்குக் கடிதம் மூலம் அழைத்து அன்பிலாருக்கு அழியா புகழைச் சேர்த்தார் அண்ணா.

> **அன்பில் பெயரில் கல்லூரி**
>
> 1989-ல் கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரம். திருச்சியில் வேளாண் கல்லூரி ஒன்றை உருவாக்கிய கலைஞர் அந்தக் கல்லூரிக்கு வேளாண் அமைச்சராக இருந்த தன்னுடைய நண்பர் அன்பில் தர்மலிங்கத்தின் பெயரையே வைத்தார்.

## பெரியாரின் செல்லப் பிள்ளை

1962-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இலால்குடியில் போட்டியிடும் வாய்ப்பை அன்பிலாருக்கு வழங்கினார் அண்ணா. அப்போது அவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்து வாக்குச் சேகரிக்க பெரியார் வருகை புரிந்தார். யாரும் எதிர்பாராத வகையில், அன்பிலார் காங்கிரஸ் அமைத்த மேடையில் ஏறி, பெரியாரிடம் கைத்தறித் துண்டைத் தந்து “என்னை வாழ்த்துங்கள்” என்று வணங்கி நிற்க, பெரியாரும் வாழ்த்தி, **“இப்போது இங்கு வந்து வாழ்த்து பெற்ற தருமலிங்கம் என் செல்லப்பிள்ளை”** என்று மேடையிலே வாழ்த்திப் பேசினார்.

அண்ணா இல்லாமல் முதல் தேர்தலை 1971-ல் சந்தித்தது கழகம். அப்போது தன்னுடைய அமைச்சரவையில் சாதாரண வேளாண் குடும்பத்தில் பிறந்து, தளகர்த்தராக கழகம் வளர்த்த அன்பிலாருக்கு வேளாண்துறை அமைச்சர் பொறுப்பை முதல்வர் கலைஞர் வழங்கினார். மேலும், உள்ளாட்சித் துறை, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, வருவாய்த்துறை ஆகிய துறைகளையும் அந்த ஆட்சிக் காலத்தில் அவருக்கு வழங்கி, அழகு பார்த்தார் கலைஞர்.

## வேளாண் குடும்பத்து வீரன்

உடல்நலம் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த அன்பில் அவர்களை, 1993 மார்ச் 5-ஆம் தேதி கலைஞர் அவர்கள் நேரில் நலம் விசாரித்து விட்டு, சங்கரன்கோவில் கூட்டத்தில் கலந்துகொள்ளப் புறப்பட்டார். சங்கரன்கோவில் செல்லும் வழியில் அன்பில் மறைந்த செய்தி கலைஞரை அடைகிறது. நிகழ்ச்சிகளை எல்லாம் ரத்து செய்துவிட்டு, திருச்சி விரைந்த கலைஞர், தன் நண்பனின் இறுதிப் பயணத்தில் கலந்துகொண்டார்.

இரங்கலிலும், “இலட்சோப லட்சம் கழகத் தொண்டர்களின் உள்ளத்தில் குடிகொண்டுள்ள, அந்த விவசாயக் குடும்பத்து வீரன் - கொள்கைத் தங்கம், அன்பில் தர்மலிங்கத்தின் பெயர் என்றைக்கும் யாராலும் அழிக்க முடியாதது!” எனப் பதிவு செய்தார் கலைஞர்.

தளகர்த்தராக கொள்கைவாதியாக கழகம் வளர்க்க, அயராத உழைப்பை வழங்கிய அன்பில் தர்மலிங்கம் அவர்களின் அழியாப் புகழைப் போற்றிடுவோம்.

**(துடிக்கும்...)**

## ‘ஹாஸ்பிடல் எக்ஸ்பிரஸ்..!’



**ப**ஞ்சாப் மாநிலத்தின் ‘கேன்சர் எக்ஸ்பிரஸ்’ போல சமீபத்தில் விபத்துக்குள்ளான **‘கோரமண்டல் எக்ஸ்பிரஸ்’** ரயிலுக்கு வங்காளிகள் மத்தியில் **‘ஹாஸ்பிடல் எக்ஸ்பிரஸ்’** என்று பெயர். அதற்குக் காரணம், மேற்கு வங்கத்திலிருந்து எண்ணற்ற வங்காளிகள் இந்த ரயில் மூலம் சென்னைக்கு வந்து, அங்கிருந்து வேலூர் மாவட்டத்தில் உள்ள கிறித்துவ மருத்துவக் கல்லூரிக்குச் சிகிச்சைக்காக செல்கின்றனர். வேலூர் மட்டுமல்லாது, சென்னையில் உள்ள அப்போலோ, சங்கர நேத்ராலயா போன்ற மருத்துவமனைகளுக்கும் அதிக அளவில் வங்காளிகள் சிகிச்சைக்காக வந்து செல்கிறார்கள்.

விபத்துக்குள்ளான ரயிலில் அவ்வளவு மக்கள் நெரிசல் இருந்ததற்கு இதுவும் ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கட்டமைப்புகள் வலிமையாக இருப்பதால்தான், இதர மாநிலங்களில் இருந்து சிகிச்சைக்காக இங்கே மக்கள் வருகிறார்கள் என்பது இங்கே குறிப்பிடப்பட வேண்டிய செய்தி!

## ::ப்ளாஷ்பேக்





ராஜகோபாலன்

### செயல் வீரர்!

**மு**த்தமிழறிஞர் கலைஞருக்கு எடைக்கு எடை நாணயம் வழங்கும் விழா தமிழ்நாடு முழுக்க நடைபெற்றது. 1981-ஆம் ஆண்டில் விளாத்திகுளம் ஒன்றிய கிளைக் கழகம் சார்பில், கலைஞருக்கு விழா எடுத்தோம். விழா மேடையில் கலைஞருக்கு சால்வை அணிவித்து வரவேற்றேன். தலைவர்கள் ஐ.பெரியசாமி, வைகோ ஆகியோர் அந்தக் கூட்டத்தில் இடம்பெற்றிருந்தனர். ‘இளைஞர் அணியின் செயல் வீரர்’ என்று கலைஞரிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார், வைகோ. என் வாழ்க்கையில் மறக்க முடியாத தருணம் என்றால், அதைத்தான் சொல்வேன்.

**-எம்.எஸ்.கே.ராஜகோபாலன்,
முன்னாள் பேரூர் கழகச் செயலாளர், தூத்துக்குடி வடக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033 -24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### முடங்கிய தமிழ்நாடு!

**1987-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தபோது, அவர் முழு உடல் தகுதியோடு இல்லை. எதற்கெடுத்தாலும் ரகசியம். ஆட்சி நிர்வாகம் ஏமாற்றம் அளிப்பதாகவே இருந்தது. சரிசெய்ய முடியாத அளவுக்கு லஞ்சம், ஊழல் புகார்கள் பெருகின. எம்.ஜி.ஆர் அலுவலகத்தில் சுமார் 8,000 கோப்புகள் தேங்கின. தொழில்துறை சுணக்கம் ஏற்பட்டு, தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை விட்டு வெளியேறின. இந்த அலங்கோலங்களால் தமிழ்நாடு ஸ்தம்பித்து விட்டது என ‘இல்லஸ்டிரேடட் வீக்லி’ ஏடு விமர்சனம் செய்திருந்தது. மொத்தத்தில் மக்களுக்கான ஆட்சி நடக்கவில்லை. அந்த ஆட்சியில் நடைபெற்ற ஒவ்வொரு செயலும் ஜனநாயக நெறிமுறைகளைத் தகர்த்து, தரைமட்டமாக்கும் செயல்களாகவே இருந்தன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 144




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131